தினமலர்
சென்னை | வியாழன் | 15.6.2017

# அகில இந்திய அளவிலான பூப்பந்து சென்னை ஐ.சி.எப்., அணி சாம்பியன்



அகில இந்திய அளவிலான பூப்பந்து போட்டியில் மோதிய அணிகள்.

**சென்னை, ஜூன் 15–**

சோழிங்கநல்லூாரில் நடந்த, அகில இந்திய அளவிலான பூப்பந்து போட்டியில், சென்னை, ஐ.சி.எப்., அணி, சாம்பியன் பட்டத்தை வென்றது.

செயின்ட் ஜோசப் கல்வி குழுமம் சார்பில், அகில இந்திய அளவிலான, ஒன்பதாவது பூப்பந்து போட்டி, சோழிங்கநல்லூர் செயின்ட் ஜோசப் பொறியியல் கல்லுாரி வளாகத்தில் நடந்தது.

அதில், சென்னை அணிகளான, ஐ.சி.எப்., லயோலா, செயின்ட் ஜோசப் உட்பட, நாடு முழுவதும் இருந்து, 16 அணிகள் பங்கேற்றன.

அதன் சூப்பர் லீக் போட்டிகளில், சென்னை, ஐ.சி.எப்., அணி, 30 – 35, 35 – 32, 35 – 23 என்ற புள்ளிக்கணக்கில், செயின்ட் ஜோசப் அணியை வென்றது. மேற்கு ரயில்வே அணி, 29 – 35, 35 – 33, 35 – 24 என, தெற்கு ரயில்வே அணியை தோற்கடித்தது. மற்றொரு போட்டியில், ஐ.சி.எப்., அணி, 35 – 28, 35 – 33 என, தெற்கு ரயில்வே அணியை ஜெயித்தது.

அடுத்த போட்டியில், மேற்கு ரயில்வே அணியும், செயின்ட் ஜோசப் அணியும் மோதியது. அதில், முதல் செட்டை மேற்கு ரயில்வே வெல்ல, அடுத்த செட்டை செயின்ட் ஜோசப் வென்றது.

கடைசி செட்டில், மேற்கு ரயில்வே அணி ஜெயித்தது. போட்டியின் முடிவில், மேற்கு ரயில்வே அணி, 35 – 24, 29 – 35, 35 – 22 என, செயின்ட் ஜோசப்பை அணியை தோற்கடித்தது.

மற்றொரு போட்டியில், தெற்கு ரயில்வே அணி, 35 – 18, 31 – 35, 35 – 21 என, செயின்ட் ஜோசப் அணியை ஜெயித்தது. இறுதி சூப்பர் லீக் போட்டியில், சென்னை ஐ.சி.எப்., மேற்கு ரயில்வே அணிகள் பட்டத்தை வெல்ல பலப்பரீட்சை நடத்தின. அதில், முதல் செட்டை மேற்கு ரயில்வே அணி வெல்ல, அடுத்த இரண்டு செட்களையும், ஐ.சி.எப்., அணி வென்று பதிலடி கொடுத்தது.

போட்டியின் முடிவில், சென்னை ஐ.சி.எப்., அணி, 30 – 35, 35 – 32, 35 – 23 என, மேற்கு ரயில்வே அணியை தோற்கடித்து, சாம்பியன் பட்டத்தை தனதாக்கியது. மூன்று போட்டிகளில் வென்று, சாம்பியன் பட்டத்தை தனதாக்கிய, சென்னை, ஐ.சி.எப்., அணிக்கு கோப்பையுடன், 50 ஆயிரம் ரூபாய் பரிசாக வழங்கப்பட்டது.

மேற்கு ரயில்வே, தெற்கு ரயில்வே, செயின்ட் ஜோசப் அணிகள், அடுத்த இடங்களை பிடித்தன.

all 160617